
# கலைஞரும் நானும்

103

**முத்தமிழறிஞர் கலைஞருக்கு, சில காலம் உதவியாளனாக இருந்ததும், தலைவரின் சங்க இலக்கிய தொலைக்காட்சி நிகழ்ச்சியைத் தொகுத்ததும் அவர் எனக்கு அளித்த வாழ்நாள் பேறு எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் இயக்குநர் பாரதிமோகன்.**



# ‘கணியன் பூங்குன்றனின் ஊர்ப் பாசம்!’

**இயக்குநர் பாரதிமோகன்**



தலைவர் பாளையங்கோட்டை சிறையில் இருந்தபோது, அவருடன் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கழகத்தினர்களில் எனது சித்தப்பா செல்வரத்தினம், மாமா முருகையா ஆகியோரும் இருந்தனர்., அவருடன். கல்லக்குடிப் போராட்டம் முதற்கொண்டு எல்லாப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்கள் எனது குடும்பத்தினர். அதனால், தலைவர் கலைஞர் அவர்களை நான் எனது சிறுவயதிலிருந்தே அறிவேன்.

அவர் குரலைக் கேட்டதும் தொண்டர்களிடம் ஏற்படும் எழுச்சியைப் பார்த்து வியந்தவன் நான். பள்ளிக்கூட நாட்களில், எனது பள்ளியின் தலைமை ஆசிரியர் திருவெண்காடு ஜெயராமன் அவர்கள் **பூம்புகார் இந்திர விழா**வுக்கு என்னை அழைத்துச் சென்றார். அந்த விழாவில், தலைவர் அவர்களின் பேருரையைக் கேட்டு அவ்வளவு ஆனந்தம் அடைந்தேன். அந்த மாபெரும் தலைவருடன், அணுக்கமாகப் பார்க்க, பேச வாய்ப்பு அமையும் என்பதெல்லாம் அன்று எனக்குத் தெரியாது. ஆனால், காலம் அமைத்துக் கொடுத்தது. இல்லையில்லை… கலைஞர்தான் அமைத்துக் கொடுத்தார்.

1975-ஆம் ஆண்டு வாக்கில் நான் திருச்சியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, எங்கள் தலைமை ஆசிரியர், திருச்சிக்கு வந்து தனது மகளுக்கு திருமணம் என துணிமணிகள், நகைகள் வாங்க வந்தவர், ‘பழைய மாணவர்களை அழைத்துக்கொண்டு மணவிழாவுக்கு சென்னைக்கு வரவேண்டும்’ என அன்புக் கட்டளையிட்டார். நானும், என்னோடு பள்ளியில் படித்த நண்பர்கள் 18 பேர் புறப்பட்டு, சென்னைக்குச் சென்றோம். மணமகன் இன்றைய முதலமைச்சர் அவர்கள்.

பெரிய இடத்து மணவிழா, ஆனால், ஆசிரியர் அழைத்து, வந்துள்ளோம் என நினைத்துக் கொண்டோம். அப்போது எங்கள் ஆசிரியர், தலைவர் கலைஞர் அவர்களிடம், எங்களை அழைத்துச் சென்று ‘இவர்கள் என்னிடம் பயின்ற மாணவர்கள்’ என அறிமுகம் செய்து புகைப்படம் எடுத்துக்கொள்ள வைத்தார். தலைவரை முதன்முதலில் அருகில் பார்த்த மகிழ்வு இன்றும் நினைவில் நிற்கிறது.

பின்னாளில் நான், ‘ரயிலுக்கு நேரமாச்சு’ உள்ளிட்ட நான்கு திரைப்படங்களை, இயக்கினேன். ஆனால், அடுத்தடுத்த வாய்ப்புகள் இல்லாமல் இருந்தபோது, கலைஞர் தொலைக்காட்சியில் வேலைக்குச் சேர்ந்தேன்.

## உனக்கு கவிதை தெரியுமா?

நான் வேலைக்குச் சேர்ந்த சில நாட்களில், தலைவர் அவர்களின் ‘கருத்தரங்குகள்’ ‘பட்டிமன்றக் கவிதைகள்’ மற்றும் அவர் எழுதிய சங்க இலக்கிய தொகுப்புகளில் இருந்து கலைஞர் அவர்களே உரை நிகழ்த்துவது போல ஒரு நிகழ்ச்சிக்குத் திட்டமிட்டனர். அந்த நிகழ்ச்சிக்கு குறிப்புகள் எடுக்கவும், அவற்றைத் தலைவரிடம் வாசித்துக் காண்பிப்பதற்கும் திருத்தங்களைச் சரிசெய்வதற்கும் ஒரு உதவியாளர் தேவைப்பட்டது. அந்தப் பணிக்காக, தொலைக்காட்சியிலிருந்து என்னை அனுப்பினர். முதல்நாள் அவரைப் பார்த்தபோது, ‘‘உனக்கு என்ன கவிதை தெரியும்?’’ எனக் கேட்டார்.

“ஓரளவு தெரியும் அய்யா.” என்றேன். “உனக்கு தெரிந்த ஒரு கவிதை ஒன்றைச் சொல்” என்றார். நான், “இந்த உலகத்தின் பேரிலக்கியமாக இருக்கும் இரங்கல் பா ஒன்றைச் சொல்லட்டுமா அய்யா?’’ என்றேன். ‘என்னய்யா… கவிதை எதாவது சொல்லச் சொன்னால், இரங்கல் பா சொல்கிறாயே’ என்றவர், ‘சொல் பார்க்கலாம்’ என்றார்.

நான், பேரறிஞர் அண்ணா மறைவின்போது தலைவர் பாடிய ‘கவிதாஞ்சலி’யை அப்படியே ஒப்புவித்தேன். மெலிதாகப் புன்னகைத்தவர். ‘நன்றாய் இருக்கிறது. நீ இந்த வேலையைச் செய்’ எனக் கூறியதுடன், அண்ணன் சண்முகநாதன் அவர்களிடம், ‘இவருக்கு கருத்தரங்கம், பட்டிமன்றம் குறித்த புத்தகங்களை எடுத்துக் கொடுங்கள்’ என்று கூறி, அந்த நிகழ்ச்சிக்கான வாய்ப்பினை வழங்கினார்.

## ‘மங்கள காதலி’

ஒருமுறை கலைஞர் தொலைக்காட்சியின், அடுத்த நாள் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் குறித்த ஒளிபரப்பு அட்டவணையை அவரிடம் காட்டினேன். ‘முதல் நிகழ்ச்சி என்ன?’ என்று கேட்டார். ‘காலை 5 மணிக்கு, திருப்பாம்புரம் சகோதரர்களின் மங்கள இசை’ என்று சொன்னேன்.

**அன்று, அவரது ஒருநாள் நிகழ்வில் என்னையும் இருக்கச் செய்து வரலாற்றில் மறக்க முடியாத நினைவுகளை அளித்தவர் கலைஞர்.**

பட்டியலைப் பார்த்தவர், ‘மங்கள இசை’ என்று போட்டிருக்கிறாயே! மங்களா யாரு உன்னுடைய காதலியா? என்று கேட்டவர், கடலுக்கு வர ‘ல’ இல்ல… அத தான் போடணும். பெரிய ‘ள’ போடக்கூடாது என்றார். கற்றுக் கொடுப்பதில் அவர் பல ஆசிரியர்களுக்குச் சமம்.

ஒரு முறை, சங்க இலக்கிய கவிதை ஒலிப்பதிவின்போது, தலைவன் தலைவிக்கு முத்தம் அளித்தான் என்பதில் ‘த்’ என்ற எழுத்து அழுத்தமாகப் பதியவில்லை. அதை அவரது கவனத்துக்குக் கொண்டு சென்றேன். அப்போது அவர், ‘யோவ்! முத்தத்தையெல்லாம் அழுத்திக் கொடுக்கக்கூடாதுய்யா! என்று கூற, அவரது டைமிங் நகைச்சுவையில் அந்த படப்பதிவில் இருந்த அனைவருமே ரசித்து சிரித்தோம்.

## பூங்குன்றனின் ஊர்

மற்றொருமுறை கணியன் பூங்குன்றனாரின் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ பாடலை, தலைவர் எளியமுறையில் எல்லோருக்கும் புரியும் வகையில், அமைத்திருந்தார். அந்த நிகழ்ச்சிக்கு நான் ஒரு முன்மொழிவு எழுதியதை வெகுவாகப் பாரட்டியது, மறக்க முடியாது.

அந்த நிகழ்ச்சியைப் பதிவு செய்தபின்னர், ‘யாதும் ஊரே யாவரும் கேளீர்!’ என்று சொன்ன கணியன் பூங்குன்றன், தன் பெயருக்கு முன்னால் பூங்குன்றம் என்ற ஊரைப் போட்டு இருக்கிறார் பார்த்தாயா? பூங்குன்றம் என்ற ஊர் இன்று, காரைக்குடி பக்கத்தில் உள்ள மகிபாலன் பட்டி.

’யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று உலக ஒருமைப் பாட்டுக்கு அடி எடுத்துக் கொடுத்த அந்த முதல் கவிஞன் தன் பெயருக்குப் பின்னால் தன் ஊரையும் போட்டு இருக்கிறான் பார்! ஊர்ப் பாசம், அந்தக் கவிஞனையும் விட வில்லை பார்! என்று கூறிய போது அவரது சங்க இலக்கியப் புலமை பெரு வியப்பை உருவாக்கியது.

கலைஞர் தொலைக்காட்சி மற்றும் முரசொலி பணிகளை முடித்துவிட்டு காருக்கு நடந்து வரும் பொழுது நான் அருகில் இருந்தால், என் தோளைப் பிடித்துக் கொண்டு நடந்து வருவார். கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் அவரின் அருகில் பயணித்த காலமும், அந்த கரங்கள் அளித்த அன்பும் மறக்க முடியாது.

ஒருமுறை ‘இந்தியா டுடே’ பத்திரிகையில் இருந்து, தலைவரின் ஒருநாள் வாழ்க்கை நிகழ்வுகளை அருகில் இருந்து பதிவு செய்ய வந்திருந்தனர். அன்று, வாசிக்க வேண்டிய கவிதையை நான் தலைவரிடம் கொடுக்கும் பொழுது புகைப்படக் கலைஞர் அதைப் படம் எடுத்தார். பின்னர், கவிதையை வாசித்துக் காட்டி விட்டு, அவருடைய பதிலுக்காக நின்றபோது, அந்தப் புகைப்படக்காரர் “தலைவரைத் தனியாகப் படம் எடுக்க வேண்டும். நீங்கள் சற்று வெளியே நில்லுங்கள்” என்றார்.

அப்போது தலைவர், ‘இந்தக் கவிதையை வாசித்துக் காட்டி, எப்படி ஒளிபரப்பு நடக்க வேண்டும் என்பதை நான் அவரிடம் கலந்து உரையாடுவது தினமும் நடக்கின்ற நிகழ்வு. அதனால், அவரையும் சேர்த்து படம் எடுங்கள்’ என்று குறிப்பிட்டார்.

அன்று, அவரது ஒருநாள் நிகழ்வில் என்னையும் இருக்கச் செய்து வரலாற்றில் மறக்க முடியாத நினைவுகளை அளித்தவர் கலைஞர். வாழ்கிறபோதே வரலாறாக இருந்த அந்தத் தலைவரின் வாழ்க்கைப் பதிவில், ஏதோ ஒரு மூலையில் நானும் இடம் பெற்றேன் என்பதில் பெருமை அடைகிறேன்.

**தொகுப்பு : எஸ்.கதிரேசன்**

*….பகிர்வார்கள்*

## நாட்டுடைமைக் கலைஞர்!




‘முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகள்’ அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னர், அவரது நூல்களைப் பதுப்பிக்க, பல பதிப்பகங்களும் தயாராகி வருகின்றனர். சில முன்னணிப் பதிப்பகங்கள் 2025 சென்னை புத்தகக் காட்சியில், அவரது நூல்களைப் பதிப்பித்து விற்பனைக்கும் கொண்டு வந்துள்ளன.

‘கவிதா பதிப்பகம்’ கலைஞரின் ‘ரோமாபுரி பாண்டியன்’ புதினத்தை அச்சிட்டுள்ளது. அவர்கள், திருக்குறள் கலைஞர் உரை நூலை செம்பதிப்பாகவும், கையடக்கப் பதிப்பாகவும் கொண்டு வந்துள்ளனர்.

ஸ்ரீசெண்பகா பதிப்பகம், ‘நெஞ்சுக்கு நீதி’ நூலைப் பதிப்பித்துள்ளனர். சீதை பதிப்பகம் ‘நெஞ்சுக்கு நீதி’யை மக்கள் பதிப்பாகக் கொண்டுவரும் அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். ‘நெஞ்சுக்கு நீதி’ ஆறு பாகங்களையும் ரூ. 3,000 விலையில் வெளியிட உள்ளனர். இந்த மாதத்தில் முன்பதிவு செய்பவர்கள் ஆயிரம் ரூபாய் தள்ளுபடியில் ரூ. 2,000 விலையில் நூலினைப் பெறலாம்.

கலைஞரின் அனைத்து கவிதைகளையும் தொகுத்து செம்பதிப்பாக வ.உ.சி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவை தவிர, நன்செய் பதிப்பகம் ‘நெஞ்சுக்கு நீதி’யை மக்கள் பதிப்பாகக் கொண்டு வருவதற்கான திட்டத்திலும் உள்ளனர். நாட்டுடைமை யாக்கப்பட்ட பின், முன்பை விட வேகமாக மக்களின் கரங்களுக்குச் செல்கின்றன, கலைஞரின் எழுத்துகள்.

## ஃப்ளாஷ்பேக்



### இவ்வளவு பணம் தரப் போகிறீர்களா?



ஏர்வாடி ராதாகிருஷ்ணன்

கலைஞர் நகைச்சுவையாகப் பேச வல்லவர், அது குறும்பாகவும் இருக்கும். கலைஞர் முதல்வராக இருந்தபோது, இலங்கைத் தமிழர்கள் இன்னல் துடைக்க, தமிழறிஞர்களும் கவிஞர்களும் படைப்பாளர்களும் பாடலாசிரியர்களும் கவிஞர் தமிழன்பன் தலைமையில், தலைமைச் செயலகம் சென்று கலைஞரைச் சந்தித்து நிதி வழங்கினோம். கூடவே, நிதி அளிக்கும் விவரமும், எங்களுடைய பெயர்களும் இருந்தன. பெயர்களுக்குப் பக்கத்தில் அலைபேசி எண்களையும் குறித்துத் தர, முதல்வரின் செயலர் வேண்டி இருந்தார். அவ்வாறே செய்திருந்தோம், அருகில் இருந்த அலைபேசி எண்களைப் பார்த்த கலைஞர், ஒவ்வொருவரும் இவ்வளவு பணம் தரப் போகிறீர்களா? என்று, அலைபேசி எண்களைப் பார்த்து குறும்பாக கேட்டு கலகலப்பூட்டியது, இன்னும் நினைவில் இருக்கிறது.

**– கலைமாமணி ஏர்வாடி ராதாகிருஷ்ணன், கவிஞர் மற்றும் எழுத்தாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### ‘ஆங்கிலத்தில் பேசவும்!’

1957-ஆம் ஆண்டு, நாடாளுமன்றத்தில், தமிழில் மொழிமாற்றம் செய்யப்படும் வசதி அளிக்கப்படவில்லை. அந்த வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் எனக் கழக உறுப்பினரான ஈ.வெ.கி.சம்பத் தமிழில் வலியுறுத்தினார். ‘‘உங்களுக்குத்தான் ஆங்கிலம் தெரியுமே, ஆங்கிலத்தில் பேசுங்கள்’’என்றார் பிரதமர் நேரு. அவருக்குப் பதில் அளித்த சம்பத், “தமிழ் மொழிபெயர்ப்புக்கு ஏற்பாடு செய்யுங்கள்’’ என ஆங்கிலத்தில் பதில் அளித்தார். அவரது முயற்சியினால்தான் நாடாளுமன்ற உரைகளை மொழிமாற்றம் செய்ய வழி ஏற்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

711

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.